தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2020 விடை (31-5-1989) ஓர் உருபா (இதழ் எண்: 122)

இராசீவின் ஐந்தாய அரசு (பஞ்சாயத்து ராச்) கரவான, சூழ்ச்சியான ஓர் அமைப்பு!

சிற்றூர்களிடம் நடுவணரசுக்கு நேரடித் தொடர்பை ஏற்படுத்துகிறது!

அதன் வழி, மாநில அதிகாரத்தை ஒடுக்கி, ஆட்சி எல்லையைக் குறைக்கிறது!

மாநிலத் தன்னாட்சி உரிமைக்கும், தனிநாட்டுப் பிரிவினைக்கும் வேட்டு வைக்கிறது!

தேசிய இன உணர்வை அடியோடு மழுக்குகிறது!

அண்மையில் இராசீவ் அரசு, இந்திய அரசியல் சட்டத்தின் 64-ஆவது பிரிவுக்கு ஒரு திருத்தச் சட்டவரைவைத் திட்டமிட்டுக் கொணர்ந்து, நாடாளு மன்றத்தில் கடந்த மே மாதம் 15-ஆம் பக்கல் அதைப் பெரும்பான்மை ஒப்போலைகளால் நிறைவேற்றியும் கொண்டது.

பெரும்பாலான இந்திய மாநிலச் சட்டமன்றங்களில் இந்திரா பேராயக் கட்சி தன் ஆட்சி வாய்ப்பை இழந்து போன நிலையில், தனக்குள்ள நடுவணரசு அதிகாரத்தை வைத்துக் கொண்டு, எதிர்க்கட்சி ஆட்சிக் கமர்ந்த மாநிலங்களில், அவற்றின் அதிகாரத்தை ஒடுக்கித், தன் ஆட்சிக் கால்களை எவ்வாறு அகல ஊன்றிக் கொள்ளலாம் என்று திட்டமிட்டு, மிக மிகக் கரவாகவும், மிகவும் சூழ்ச்சியாகவும் எண்ணிப் பார்த்தது. இறுதியில், தாயிடத்திலிருந்து குழந்தைகளைப் பிரிக்கின்ற முறையில் மாநிலங்களின் ஆளுமையில் உள்ள சிற்றூர்ப்புறங்களை நேரடியாகத் தன் ஆளுமையின் கீழ்க் கொணரும் முயற்சியாக ஐந்தாய அரசு

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

ஒரு விடுதலை விரும்பியின் மடல்கள்

மடல் : 12

மதுரை, நடுவண் சிறை.
26-12-88

பேரன்புக்கும், பெருமதிப்புக்கும் உரிய அப்பா அவர்களுக்கு, வணக்கம்,

கடந்த 17-12-88 ஆம் நாளிட்ட மடலுக்குப் பின், மடல் வருமென எதிர்நோக்கியிருந்தேன். ஒரு வேளை மடல் கிடைத்ததா-இல்லையா என்று தெரியவில்லை. தமிழ்நிலம் இதழ் எண்: 113 கிடைத்தது. **தென்மொழியும் தமிழ்ச்சிட்டுக்** கிடைத்தன. இதழ்கள் சிறப்புற இருந்தன. தென்மொழி, தமிழ்நிலம் இதழ்கள் நிறுத்தம் தொடர்பான அறிக்கை சிறப்பாக இருந்தது. அதில் கொடுக்கப் பெற்ற கட்டளைகளும் மிகு சிறப்புடையன.

வெறும் வாய்வீச்சு வீரர்களாக, பக்கம் பக்கமாக எழுதித் தள்ளி விடுகிற போலி களுக்கும்,அல்லது எதையும் எழுதவும் செய்யாமல், தானும் செய்யாமல், நேரத்தை வெட்டியாகப் பேசிப் பேசிச் சீரழித்து வருவோர்க்கும், பெரும் சாட்டை-யடியாய் இருந்தது, கட்டளை.

இக் கட்டளையைக் கூட நையாண்டி செய்து பேசும் கூட்டமும் இருக்கும். அக் கூட்டங்கள் எக்-காலும் பயன்படா, எனவே இத்தேறுதலில் முடி-வெடுத்து, சிறப்பான நிலையில் தொடர வேண்டு-மாய் எதிர்நோக்குகிறேன்.

''என்றும்போல் தேர்தல் வரும்...''—எனும் பாடல் என்பது உண்மை. அதே உண்மையடிப் படையை விளக்கிய படியே, கலைஞருக்கு ஒப்போலை இடச்சொல்லி எழுதியிருந்ததற்கான காரணங்கள் சரியானவையாக இருப்பினும், இந்திய அரசின் தேர்தல்களையே நாம் புறக்கணிப்பதே இன்றைய தேவையாக இருக்க வேண்டும். அக் கூட்டத்திற்கு, இங்குள்ளவர்களைக் கொண்டுவர வேண்டும் என எண்ணுகிறேன்.

எங்களுக்கு இங்கு ஒப்போலை உண்டு அது போடுவது பற்றித் தாளில் எழுதிக் கேட்டனர். தங்களின் பாடலை எழுதி, எனவே இந்தப் போலித் தேர்தல்களை நாங்கள் ஏற்கவில்லை; எனவே ஒப்-போலை போடவில்லை என எழுதிக் கொடுத்து விட்-டோம். அச்சக அழுத்த நிலைகள் மேலும் மேலும் கடினமாகவே இருக்கும் என எண்ணுகிறேன். எல்லாம் விரைந்து சரிப்பட வேண்டுமாய் ஆழ்ந்து எண்ணிக் கொண்டுள்ளேன். பிறவற்றை உடன் எழுதுகிறேன்.

அன்பு மகன்
பொழிலன்.

அம்மா, நீங்கள் 16-ஆம் பக்கல் எழுதத் தொடங்கி 20 ஆம் பக்கல் அஞ்சலில் இட்ட மடல் கிடைத்தது. தங்கள் மடல் கிடைத்த 22-ஆம் பக்கலே தேனின் மடலும் கிடைத்தது. ஒருவேளை இம் மடல் தங்களுக்குக் கிடைக்கையில் தேனும் அங்கு இருக்கலாம் என எண்ணுகிறேன்.

நீங்கள் எப்படியுள்ளீர்கள்? உடல் நலமுடன் உள்ளதா? நலமுடன் கவனித்துக் கொள்ளுங்கள். நாங்கள் இங்கு நலமுடன் உள்ளோம். எவ்வகைத் தொல்லையும் இல்லை. நேற்று கிறித்துமசை ஒட்டிச் சிறையில் அனைவர்க்கும் கறிப்புலவும் முட்டையும் கொடுத்தனர். முகிலன் காய்கறிப் புலவு சாப்பிட்-டார்.

கடந்த வெள்ளிக்கிழமை முருகவேள் அண்ணன் வந்திருந்தார். நாளை நம் அன்பர்கள் வருவார்கள்

எங்களின் மாறுதல் இன்மையைப் பற்றிக் கடந்த மடலில் எழுதியிருந்தேன். அது பற்றி ஒன்றும் கவலைப் பட வேண்டாம். எதுவும் சரியானபடி நடக்கும்.

தங்களின் கால் வலி எப்படியுள்ளது? சரியான படி மருந்துண்டு அதைக் கவனியுங்கள். குளிர் அங்கும், இங்கும் ஒரே படியாகத்தான் உள்ளது. Hindu-வில் பார்த்தேன்.

அம்மா, அப்பாவின் உடல் நலத்தை நன்கு பேணவும். அப்பா அவர்களும் நீங்களும் இந்த அகவையிலும் தங்கள் தங்களின் முழு உழைப்பை-யும் செலுத்திக் கொண்டிருப்பது, மிக வருத்தமாக உள்ளது. அடிக்கடி மடல் எழுதுங்கள்.

பிறை! எப்படியிருக்கிறாய்? ஏன் மடலே எழுதுவதில்லை? நாங்கள் நலமுடன் உள்ளோம். வீடு சரியான நிலையில், எல்லா வகையிலும் அமைந்து விட்டதா? அப்பா அவர்கள் எழுதிய **வீடுபேறு** (**தென்மொழி**, சுவடி 24; ஓலை 8) எனும் ஆசிரியவுரை படித்து மிகவும் வருத்தமே வந்தது. தணல்குட்டி எப்படியுள்ளது? அது மிகவும் 'அதம்' பண்ணிக்கொண்டுள்ளதாக அம்மா எழுதினார்கள், 'கன்னுக்குட்டிக்கு என் அன்பு முத்தங்கள்.

பிறை! உந்தில் போகும் போது வரும் பொழு-தெல்லாம் எச்சரிக்கையுடன் போய் வா. சென்னை-யைப் பற்றி ஓரளவு உனக்குத் தெரியலாம். மிகுந்த மனத்துணிவுடன் நடந்து கொள்ள வேண்டும். எச்சரிக்கையாகவும் நடந்து கொள்ள வேண்டும்,

செந்து! எப்படியுள்ளாய்? வெளிநாடு செல்ல அனைத்து ஆயத்தங்களும் செய்து கொண்டிருப்ப-தாக அம்மா எழுதியிருந்தார்கள். எப்பொழுது போவது என்பது முடிவாகி விட்டதா? மடல் எழுது. அப்பாவிடம் ஒவ்வொரு நாளும் பேசு.

(தொடர்ச்சி 12-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

(முதல் பக்கத் தொடர்ச்சி)

(பஞ்சாயத்து ராஜ்ஜியம்) என்னும் ஓர் அமைப்பை உருவாக்கிக் கொண்டது.

இந்த ஐந்தாய ஆட்சி அமைப்பைப் பற்றிச் சுருக்கமாக மதிப்பிட்டால், நடுவணரசு, **மாநில அரசிடம் உள்ள அதிகாரங்களை வாங்கிச் சிற்றூர்ப்புறங்களில், ஐந்து பெயர்கள் கொண்ட குழுவினரிடம் ஒப்படைக்கின்ற செயலே ஆகும்.**

ஏறத்தாழ முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் இவ்வாறு முழு அதிகாரம் கொண்ட மாவட்ட அமைப்புகள் மாவட்டக் குழுவாட்சி முறை (District Board Administration) என்று ஒரு முறையிருந்தது. அதில், இன்றுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் (District Collector), வட்டாட்சித் தலைவர் (Tashildar) ஆகியோருக்குள்ள பெரும்பாலான அதிகாரங்கள் கொண்ட குழு ஒன்று செயல்பட்டுச் சிற்றூர்ப்புறங்களில் உள்ள கல்வி, சாலை அமைப்பு, ஊர்ப்பாதுகாப்பு, தண்ணீர் வசதி முதலியவற்றைக் கவனிக்கவும் அவற்றுக்கான பொருள் ஒதுக்கீடு செய்யவும் போதுமான அதிகாரம் பெற்றிருந்தது. மாநில அரசும் அதற்குப் போதுமான பொருள் ஒதுக்கீடு செய்து வந்தது. அந்த மாவட்டக் குழுவாட்சி உறுப்பினர்களும் தேர்தல் வழியாகத்தான் தேர்ந்தெடுக்கப் பெறுவார்கள். ஆனால் பேராயக்கட்சி ஆட்சிப் பொறுப்பேற்றுக் காமராசர் முதலமைச்சராக வந்தபின் அம் மாவட்டக் குழு ஆட்சி முறையைத் தவிர்த்து விட்டுச் சிற்றூர்ப் புறங்களை ஊராட்சி மன்றங்களின் ஆட்சிப் பொறுப்பிலும், அவற்றைப் படிப்படியாக ஆளுகின்ற அதிகாரத்தை வட்டாட்சியர், மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் பொறுப்பிலும் உட்படுத்தினர். ஆனால் அனைத்து அதிகாரங்களும் மாநில அமைச்சரவைக்கு உட்பட்டிருந்தன.

இதுநாள் வரையிருந்த இம்முறையை மாற்றி மாநில அமைச்சரவைக்கு உட்பட்டிருக்கும் அதிகாரங்களைக் குறைத்து, பொருள் ஆட்சி உட்பட அவற்றை நேரடியாகச் சிற்றூர்ப்புற ஐந்தாயங்களே (பஞ்சாயத்துகளே) ஆளுமை செய்யும்படி, அதற்கு அரசியல் அமைப்பியல் சட்டத்தில் உள்ள 64-ஆவது பிரிவை விரிவுபடுத்திப் புதுச் சட்ட அமைப்புகளை இப்பொழுது ஏற்படுத்தியுள்ளது இராசீவ் அரசு.

இப்படிச் செய்ததன் வழி, நடுவண்அரசு, சிற்றூர்ப்புற ஐந்தாய ஆட்சியோடு நேரடியாகத் தொடர்பு கொண்டு தனக்கேற்றவாறு, சிற்றூர் ஆட்சியை அமைத்துக் கொள்ள முடியும். நடுவணரசு கொணரும் திட்டங்கள் அனைத்தையும் எவ்வகை மறுப்பும் இன்றி அச்சிற்றூர்ப்புற அமைப்புகள் செயல்படுத்தியாக வேண்டும் என்னும் கட்டாயம் அவற்றுக்கு உண்டு. இதனை நடுவணரசுக்கு வேண்டாத அல்லது வேறான மாநில அரசுகள் தடைப்படுத்த முடியாது. இப்பொழுதுள்ள நிலையில் நடுவணரசு போடும் திட்டங்களை எதிர்க்கட்சிகளின் கைகளில் உள்ள மாநில அரசுகள் மறுக்கலாம். அல்லது தவிர்க்கலாம். இனி அவ்வாறு நடைபெறுவதற்கான வாய்ப்புகள் இல்லை. இது நாள் வரை மாநில அரசுகள் சொல்வதை, நேற்று வரையிருந்த ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் மறுக்க இயலாது. மாநில அரசுகளின் கட்டளைப்படி அவை செயற்பட்டாக வேண்டியிருந்தது. இனி, ஐந்தாய அமைப்புகள் அவ்வாறு செயல்பட வேண்டிய தேவையில்லை. ஆனால் நடுவணரசு இடும் கட்டளைப்படி மாவட்ட ஆட்சி அமைப்புகளும், அவற்றின் வழி ஊராட்சி ஒன்றியங்களும், அவற்றின் வழி ஐந்தாயங்களும், செயல்பட வேண்டியிருக்கும். இதில் மாநில அரசுகள் குறுக்கிட முடியாது. இம்மாறுதல்களால், மாநிலங்களுக்குள்ள அதிகாரங்கள் உரிமைகள் தவிர்க்கப்படுகின்றன; தகர்க்கப்படுகின்றன. **இதுதான் ஐந்தாய அமைப்பால் மாநில அரசு இழக்கின்ற உரிமை. இந்த உரிமையை நடுவணரசு நேரடியாகக் கைப்பற்றிக் கொள்கிறது.** மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வழியாக இந்த அதிகாரச் செயல்பாடுகள் நேரடியாகவே நடுவணரசால் நிகழ்த்தப் பெறும். பொருளதிகாரத்தைக் கொண்டும் கூட மாநில அரசுகள், தங்கள் மாநிலங்களில் உள்ள சிற்றூர்களை இனி மிரட்ட முடியாது; பணிய வைக்க முடியாது; தங்கள் சார்பாகத் திருப்ப முடியாது. அந்தப் பொருள் ஒதுக்கீடும், நடுவணரசு வகுத்துக் கொடுக்கின்ற முறையில், மாநிலப் பொருள் குழு. ஐந்தாயங்களுக்கு இயல்பாகவே ஒதுக்கியாக வேண்டும். இதிலும் மாநில அரசு தன் அதிகாரத்தைக் காட்ட முடியாது. வரவு செலவுக் கணக்குகளைப் பார்க்கின்ற அதிகாரத்தைக் கூட நடுவணரசு மாநில அரசுகளுக்கு விட்டு வைக்கவில்லை. அதைக் கூட நடுவணரசின் அதிகாரத்தில் உள்ள மாநிலத் தணிக்கை அதிகாரி பார்த்துக் கொள்வார்.

இம் முறைகள் பற்றி வெளிப்படையாக—பச்சையாகச் சொல்வதானால், வேர்கள் நேரிடையாகக் கிளைகளொடு தொடர்பு கொள்ளும். அடிமரம் வழியாகத் தொடர்பு கொள்ளத் தேவையில்லை. எனவே கிளைகள் அடிமரத்துக்கன்று, வேர்களுக்கே நன்றிக் கடன் ஆற்றும். இதனால், மாநிலத்தில் எந்தக் கட்சி, ஆட்சி அமைக்கிறது என்பதுபற்றி நடுவணரசுக்குக் கவலையில்லை. நடுவணரசில் உள்ள கட்சிக்குத்தான் நாடு முழுதும் கடமைப்பட்டிருக்கும்.

எனவே, இனி மாநிலத்தன்னாட்சி (மாநில சுயாட்சி) என்ற பேச்சுக்கே இடமில்லை. அதுமட்டுமன்று, தனிநாட்டுக் கோரிக்கைக்கும் இடமில்லை,

Scanned with CamScanner

ஏனெனில் தனிநாடு கேட்கின்ற உணர்வே தோன்றாதவாறு, நடுவணரசு, தன் நேரடி அதிகாரத்தின் கீழ் உள்ள சிற்றூர்ப்புறங்களை (அஃதாவது கிராமங்களை)ச் செய்து விட முடியும். இன்னும் தெளிவாகச் சொல்வதானால், இப்பொழுது, மாநில எல்லைக்குள் வானொலி நிலையங்களும், தொலைக்காட்சி நிலையங்களும் இருந்தாலும், அவை எவ்வாறு மாநில ஆட்சியாளர்களைப் பொருட்படுத்தாமல், நடுவண் அரசு சொல்கிறபடி — இராசீவ் விருப்பப்படி நடந்து கொள்கின்றனவோ, அப்படியான நிலையில் ஐந்தாய ஆட்சி அமைப்புகள் நடந்து கொள்ளும். எனவே அவற்றின் கீழ் உள்ள மக்களும் அப்படியே நடந்து கொள்வர். மாநில அமைச்சர்களையோ, அவர்கள் கட்சியையோ அவை பொருட்படுத்த வேண்டிய தேவையே இல்லை! இதில் ஆண்கள் பெண்கள் அனைவரும், நடுவணரசு ஆட்சிக்குக் கட்டுப்பட்ட பெட்டிப் பாம்புகளைப் போல அடங்கிக் கிடப்பர். மாநில உரிமைகள் என்பவற்றைப் பற்றியோ, அவற்றை வாங்கித் தருவதாகக் கூறும் மாநில அரசுகளைப் பற்றியோ, அவர்கள் கவலைப் படவோ, அக்கறைப் படவோ தேவையில்லாத நிலையில் உயர்ந்து விடுவார்கள்.

நடுவணரசுக்குகந்த இந்த வாய்ப்பான சூழ்நிலையில், சவகர் வேலை வாய்ப்புத் திட்டம் மட்டுமன்று, இந்திரா நீர்வசதித் திட்டம், இராசீவ் சாலை வசதித்திட்டம், பிரியங்கா கல்வியமைப்புத் திட்டம், இராகுல் தேசியக் குடும்பத்திட்டம், என்று இராசீவுக்கு இனிமேல் பிறக்கப் போகிற பெயரன்கள், பெயர்த்திகள் ஒவ்வொருவரின் பெயராலும் திட்டங்களைத் தீட்டிக் கொண்டே போகலாம் என்பதை நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளுதல் வேண்டும் என்க.

தமிழ்நாட்டில் இராசீவின் வீழ்ச்சிக்குப் பின்னர், அவர் மூளையில் தோன்றி, உருசியப் பின்னணியில் உருவாக்கப் பெற்றதே ஐந்தாய ஆட்சித் திட்டம். இவ்வொரே திட்டத்தில மாநில உணர்வுகள், விடுதலை உணர்வுகள், மாநிலத் தேசிய இன உணர்வுகள் அனைத்தையும் வீழ்த்தி விட்டு இவ் விந்தியாவையே இந்திரா பாரத் ஆக்கப் போகிறார் இராசீவ். பொறுத்திருந்து பாருங்கள்.

மற்றபடி இத்திட்டத்தைப் பற்றி எதிர்க் கட்சியினர் அனைவரும் எவ்வளவோ எதிர்ப்புக் காட்டினர். இருப்பினும் இவ் வைந்தாய ஆட்சி பற்றிய சட்டத்திருத்தத்தை நிறைவேற்றியே விட்டார், இராசீவ். அவருக்கு அவரைப் பற்றித் தவிர வேறு எவரைப் பற்றியும் கவலையில்லை என்பது அவர் எடுக்கின்ற ஒவ்வொரு முடிவிலிருந்தும் நாம் தெரிந்து கொள்ளலாம்.

இராசீவுக்கு உள்ள கவலையெல்லாம் தாம் நினைக்கின்ற ஒவ்வொரு திட்டத்தையும் அனைவரும் ஆதரிக்க வேண்டும் என்பதுதான். அதுவுமன்றி அவர் நடவடிக்கைகளை எவரும் எதிர்க்கக் கூடாது என்பதும் அவர் கொள்கையாக இருக்கிறது. அவ்வாறு எதிர்ப்பவர்களையெல்லாம் அவர் சகட்டு மேனிக்குக் கடுமையான சொற்களால் சாடுகிறார். இவருக்குத் தவிர, வேறு எவருக்கும் மக்கள் மேல் பற்றில்லை என்று இவர் கருதுவது, இவர் அறியாமையையே காட்டுகிறது.

மேலும் ஐந்தாய அரசைக் கொண்டு வந்த மறைமுகமான நோக்கத்தையும், 18 அகவை வந்த அனைவர்க்கும் ஒப்போலையாளிக்கும் உரிமை வழங்கியதையும் பார்த்தால், அவர் விரைவில் இந்தியா முழுமைக்கும் சட்ட மன்றத் தேர்தலையும், பாராளுமன்றத் தேர்தலையும் ஒன்றாகவே நடத்த விரும்புகிறார் என்றும் கருதத் தோன்றுகிறது. அவ்வாறு இரண்டு தேர்தல்களையும் ஒன்றாக நடத்துவதானால், அவர் இப்பொழுது அண்மையில் நடந்த சட்டமன்றத் தேர்தல் வழியாக அமைந்துள்ள தமிழ்நாடு முதலிய மாநிலங்கள் உள்பட அனைத்து மாநிலங்கள் அரசையும் கலைத்தாக வேண்டும். பாராளுமன்றத் தேர்தல், வரும் திசம்பர் மாதத்தில் நடைபெறும் என்று சில செய்திகள் தெரிவிக்கின்றன. அக் கருதுகோள் உண்மையாக இருந்தால் நம் கணிப்பும் உண்மையானதாகவே இருக்க வேண்டும். அஃது உண்மையாக இருந்து விட்டால், தமிழ்நாட்டில் மீண்டும் கலைஞர் அரசு கீழிறக்கப் பட்டு விடும். அவ்வாறு கலைஞர் அரசு கீழிறக்கப் பட்டால், மீண்டும் ஆட்சிக் கட்டில் ஏறுவது மிகவும் கடினமாகவே இருக்கும். அந்நிலைக்கு இந்த ஐந்தாய அமைப்புகள் கட்டாயம் இராசீவுக்குக் கைகொடுத்தே ஆக வேண்டும். எதற்கும் அண்மைக்கால விளைவுகளைப் பொறுத்தே எதிர்கால இந்தியாவின் நிலைப்பாடு இருக்கும் என்பதை நாம் சொல்லத் தேவையில்லை. அதை எதிர்காலமே கட்டியங் கூறி உரைத்து விடும் என்று நம்புக.

ஐந்தாய ஆட்சி முறை...

மாநிலத் தன்னாட்சிக்கு வேட்டு! மாநிலங்களின் அடிப்படை உரிமைகளைத் தகர்ப்பது! தற்போதைய கூட்டாட்சி முறைக்கு உலை வைப்பது!

ஐந்தாயங்களுக்குத் தன்னாட்சி கொடுப்பது என்ற பெயரில் நடுவணரசு ஒற்றையாட்சி முறையை உருவாக்குகிறது!

தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்களுக்கும் பெண்களுக்கும் இட ஒதுக்கீடு செய்வதும், ஐந்தாயங்களுக்கு அதிக அதிகாரம் கொடுப்பதும் போன்றவை தி.மு.க. விற்கு மாறுபட்ட கொள்கைகளல்ல ஆனால் மாநில உரிமைகளை முடக்குவது ஏற்றுக் கொள்ளக் கூடியது அன்று.

— கலைஞர்

(தொடர்: 5)

(முன் இதழ்த் தொடர்ச்சி)

குடமுருட்டியிலிருந்து கொடைக்கானல் வரை..!

தமிழ்நாடு விடுதலைப் படைகளும் இந்தி(ய)ப் பாசிசக் கும்பல்களும்

- செ. அமிழ்தன் -

இந்தி(ய)-இலங்கை உடன்பாடும், தில்லியின் திட்டமிட்ட வன்கவர்ப்புப் போரும்:

இந்திய-இலங்கை உடன்பாடு இந்தியா தன் படைகளைத் திட்டமிட்டிருந்தபடி இலங்கைக்கு அனுப்பவே சிறப்பாக உருவானதாகும். எனவே உடன்பாட்டின் வழி தமிழீழத்துக்குள் புகுந்த இந்தி(ய)ப் படைகள், அங்கு இந்தி(ய) உளவுப் படை அளித்த திட்டத்தின்படியே தனது கிழறுப்பு வேலைகளைச் செய்யத் தொடங்கின. அதனால் புலிகள் (Tigers) எனும் போராளி அமைப்பின் கோரிக்கைகளை இந்தி(ய)ப் படைகள் ஏற்க மறுத்தன. அதனால் புலிகள் அமைப்பு தம் கோரிக்கைகளைத் தில்லியரசிடம் வலியுறுத்தி வந்த காலம். அதற்காக அறப்போராட்ட வழிகளில் ஈடுபடத் திட்டமிட்டுக் கொண்டிருந்த காலம். அப்பொழுது தமிழகத்தில் மிகப் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய நிகழ்வு ஒன்று நடந்தது. அது திருச்சி மாவட்டம் பொன்பரப்பியில் நடந்த வைப்பகக்கொள்ளையின்போது, தமிழ்நாடு விடுதலைப் படையின் அமைப்பாளர் தமிழரசன், அவரின் குழுவினரோடு அடித்துக் கொல்லப் பட்டதுதாகும். இந்நிகழ்வு நடந்த நாளன்றே வானொலியும், தாளிகைகளும் தமிழரசன் கைது செய்யப்பட்டதாகக் கூறின. ஆனால் அரசு, மக்கள் அடித்துக் கொன்று விட்டதாகக் கூறியது. இதில் எது உண்மை என்று தெரியவில்லை. அ'து எப்படியிருப்பினும் தமிழரசன் குழுவினர் அடித்துக் கொல்லப் பட்டது, அரசு தனது பொய்ப் பரப்பலில் கூறியது போல மக்களால் அன்று; மாறாக இந்தி(ய) உளவுத் துறையினராலேயே ஆகும். இதைக் கள ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன.

இந்நிகழ்வையடுத்துத் தமிழகத்தையே உலுக்கிய சில நிகழ்வுகள் தமிழீழத்தில் நிகழ்ந்தன. அவை இந்தி(ய)ப் படைகளின் கிழறுப்பு வேலைகளாலும் தில்லியரசின் இரண்டகத் (துரோகத்)தனத்தாலும் உண்ணா நோன்பிருந்து உயிர்ந்த திலீபனின் இறப்பும், மற்றும் குமரப்பா, புலேந்திரன் போன்ற தளபதிகள் உள்ளிட்ட பன்னிரு(12) புலிகளின் இறப்பும் ஆகும். இவற்றை வைத்து ஒரு திட்டமிட்ட இனக் கலவரத்தை உருவாக்கிய இந்தி(ய)ப் படைகள் 1987 அக்டோபர் திங்களில் தமது நேரடியான—இந்தி(ய)த் தில்லி அரசின் மேலாளுமை வெறிக்கு வழியமைக்கும் தேசிய ஒடுக்கல்—போரை ஈழ மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டன. இப்போரிலிருந்து மக்களைக் காக்க வேண்டிய கரணியத்தால் போராளிகள் கருவி ஒப்படைப்பை நிறுத்தித் தற்காப்புப் போர் நடத்த அணியமானார்கள். இதனால் தமிழீழத்தில் போராளிகளுக்கும் இந்தி(ய)த் தில்லியரசின் கூலிப் படைகளுக்கும் இடையே போர் மூண்டது. அப்போர் இன்றும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுதான் வருகின்றது.

தில்லியரசின் ஈழ வன்கவர்பு(ஆக்கிரமிப்புப்) போரும், தமிழக அரசியல் குழப்பமும்:

தில்லியரசின் இந்த வன்கவர்ப்புப் போரைக் கண்டு முன்பு தமிழீழத்துக்கு இந்தி(ய)ப் படைகளை அனுப்பக் கோரிய தமிழக முதலாளிய அரசியல் தரகர்களும், அவர்களுடைய கட்சிகளும் போரை நிறுத்தக் கோரித் தில்லியரசுக்கு வேண்டுகோள்கள் விடுத்தனர். சில அமைப்புகள் ஆர்ப்பாட்டங்களையும், கண்டனப் பேரணிகளையும் நடத்தினர். சில தமிழ் அமைப்புகளும், சில குடியாட்சி அமைப்புகளும் இணைந்து **'மக்கள் தொடரி'** போன்ற ஆர்ப்பாட்டங்களையும் நடத்தினர். இந்த நிலையில் சரியான தீர்வாக, **''இந்தியப் படையே இலங்கையை விட்டு வெளியேறு''** எனச் சில புரட்சி அமைப்புகளும் போராட்டத்தில் இறங்கின. என்றாலும் இந்தி(ய) பாசிசக் கும்பல் அமைதியாகவே தனது தேசிய ஒடுக்கல் போரை (National oppression war) ஈழ மக்கள் மீது நடத்தியது; இன்றும் தொடர்ந்து நடத்துகின்றது.

இவ்வாறு தமிழீழத்தின் மீதான இந்தி(ய) அரசின் வன்கவர்ப்புப் போருக்கு எதிராகத் தமிழக மக்கள் கிளர்ந்தெழுந்து போராடிய வேளையில்தான் தில்லியின் தலை சிறந்த தமிழகப் பாதந்தாங்கியும், பாசிச முதலமைச்சருமாகிய நடிகர் ம.கோ.இராமசந்திரன் (M.G.R.) இறந்து போனார். அதனால் அவரின் அரசியல் கட்சியாகிய அ.இ.அ.தி.மு.க. இரு பிளவுகளாகப் பிரிய நேரிட்டது. எனவே தமிழக அரசியல் குழப்பத் தன்மையுடையதாகி, வன்முறைக் கலவரங்களினூடே ''தமிழக அரைக் குடியேற்றச் சட்டப் பேரவை'' தில்லியரசால்

கலைத்தெறியப்பட்டு நேரடி குடியேற்ற ஆட்சி (குடியரசுத் தலைவர் ஆட்சி) தமிழகத்தில் திணிக்கப்பட்டது. அந்த ஆட்சிக்குத் தலைவராக வந்த **'வந்தேறிய'** ஆளுநர் தாம் விரைவிலேயே தமிழகச் சட்டப் பேரவைக்குத் தேர்தல் நடத்தித் தில்லிக்குரிய பாதந்தாங்கிகளைத் தேர்வு செய்து உருவாகும் —மக்களாட்சியை மீண்டும் தமிழகத்தில் அமைக்கப் போவதாகவும், அதற்கு அரசியலாளர்கள் உதவ வேண்டுமென்றும் அறைகூவல் விட்டார்; அதனால் தேர்தல் திரு(ட்டு)விழாக்களில் ஒப்போலைகளைப் பொறுக்கியே பழக்கப்பட்டுப் போன தமிழக அரசியல் தரகு கட்சிகள் வரும் தேர்தலில் தமிழர்களுடைய ஒப்போலைகளை எவ்வாறு பொறுக்குவது எனத் திட்டமிடத் தொடங்கினர். இதனால் தமிழீழ அவலம் தமிழகத்தில் திட்டமிட்டு மறைக்கப் படத் தொடங்கியது.

தமிழீழ வன்கவர்பின் அவலமும், தமிழ்நாடு விடுதலைப் படையின் மறு எழுச்சியும்:

இந்நிலையில் **'எங்குப் போர் நடந்தாலும் அங்கு முதலில் கொல்லப் படுவது உண்மையே'** என்னும் முதுமொழிக்கேற்ப இந்தி(ய) பாசிசக் கும்பல் தன் மக்கள் தொடர்புக் கருவிகளான தாளிகைகள், வானொலி மற்றும் தொ(ல்)லைக் காட்சி போன்றவற்றின் மூலம், பொய்ப்பரப்பலைக் கட்டவிழ்த்து விட்டுத்'தில்லி இந்தியா'வின் மேலாளுமை வெறியின் விரிப்புக்கு நயன்மை கற்பித்தது. இதையெதிர்த்துத் தமிழ்நாடு விடுதலைப் படை தனது மறு எழுச்சியைத் தொடங்கியது. ஆனால் அந்த மறு எழுச்சி முன் போலவே குண்டு வெடிப்புகளாகவே அமைந்தன. தமிழீழ வன்கவர்புப் போருக்கு எதிராகவே அவை நடந்தேறின. இதில் முகாமை பெறுவது கொடைக்கானல் தொலைக் காட்சி நிலையக் குண்டு வெடிப்பே ஆகும்.

இந்த கொடைக்கானல் நிகழ்வுக்கு முன்னதாகச் சென்னை, கிண்டி கத்திபாரா முனையிலுள்ள நேரு சிலையில் வெடிகுண்டு நிகழ்வு ஒன்று நடந்தது. இவ்விரண்டு நிகழ்வுகளையும் **'தமிழ்நாடு விடுதலைப் படை'**யினரே நடத்தியதாக அவ்விரண்டு இடங்களிலும் கிடைத்த தகவல், சுவரொட்டி அறிக்கைகள் கூறுகின்றன. நேரு சிலை வெடிப்புக்குக் கரணியங்கள் இல்லாமல் இல்லை. தமிழகத்தில் நடிகர் ம. கோ. இரா. அவர்களின் இறப்புக்குப் பின்னர் சட்டப் பேரவையைக் கலைத்து ஆளுநர் ஆட்சியைத் திணித்த தில்லி பாசிசக் கும்பல், தமது கட்சிக் கூடாரமாகிய பேராயத்தின் (காங்கிரசின்) தமிழக அடியாட்களைக் கொண்ட பாதந்தாங்கி அரசைத் தமிழகத்தில் குடியமர்த்த வேண்டும் என்ற வெறியில் செயல்படத் தொடங்கியது. ஆனால் அவர்களின் செயல்கள் யாவும் மக்கள் எதிர்ப்புச் செயல்கள் ஆகவே அமைந்து வந்தன. இந்நிலையில்தான் மீண்டும் பலகோடி உருபாக்கள் செலவில் இந்தி(ய) பாசிசத்தின் தலைமைக் கூடாரமாகிய பேராயத்தின் (காங்கிரசின்) மாநாட்டை மறைமலை நகரில் நடத்துவதற்குத் தமிழக அடியாட்கள் தங்களுடைய செயல்களை முடுக்கினர். இதே காலத்தில்தான் தமிழீழத்தில் இந்தி(ய) அரசின் இரண்டகத் தனத்தால் மீண்டும் ஒரு நிகழ்வு நடந்தது. **அது புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்திக்க இந்திய உளவுப் படை சென்னையிலிருந்து அனுப்பி வைத்த தூதுவர் ஜானி (Johny) எனும் விடுதலைப் போராளி இந்தி(ய)ப் படையினரால் சுட்டுக் கொல்லப் பட்டதே ஆகும்.** இந்நிகழ்வு தமிழகத்தில் பெரும் பரபரப்பையே ஏற்படுத்தியது.

மறைமலை நகர் மாநாடும், பாசிசக் கும்பலின் சிறை வைப்பும்:

மறைமலை நகர் மாநாடு ஏப்ரல் திங்களில் நடைபெறுவதாக அறிவிப்பு வெளியானது. அந்த மாநாட்டிற்குத் தில்லிப் பேரரசின் முடிசூடா மன்னன் ஈழத் தமிழினப் படுகொலை வீரன், இந்திய மக்களின் உரிமைக் கோரிக்கைகளை வல்லரசுப் போர் வெறியால்—வல்லாளுமை வெறியால்—நிறைவேற்றும் பாசிச வெறியன், காங்கிரசு இந்தி(ய) வெறி கூடாரத்தின் தலைவன், பாசிச இராசீவ் வருவதாக இருந்தது. அதனால் தமிழகத்தில் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களும், போராளி அமைப்புகளைச் சேர்ந்தோரும் தளை செய்யப்பட்டுச் சிறைகளில் அடைக்கப்பட்டனர். எனவே பாசிசப் பேரரசருக்கும், அவருடைய படைகளுக்கும் தமிழக மக்களின் எதிர்ப்புணர்வைக் காட்ட வேண்டும் என்ற எண்ணம் உருவானது. அந்த எதிர்ப்புணர்வே தமிழ்நாடு விடுதலைப் படையின் மறு எழுச்சியாக எழுந்தது. இதற்குத் தமிழக மக்களின் வரலாற்று வழி வந்த இந்தித் திணிப்பு எதிர்ப்புணர்வு பயன்பட்டது. அதனைத் தான் தமிழ்நாடு விடுதலைப் படையின் சுவரொட்டிகள் நேரு சிலைக்குக் குண்டு வெடிப்பில் **''இந்தி வெறியருக்கு இங்கு எதற்குச் சிலை''** என்றும், தில்லி வல்லரசின் போர் வெறி ஆளுமையை, **''இந்திய மக்களை எல்லாம் கொன்று குவித்து விட்டு எந்த இந்தியாவைக் காக்கப் போகிறார்கள் இந்த வெறியர்கள்''** எனவும் அம்பலப் படுத்தியிருந்தன.

தில்லியரசின் போர் வெறியும், அதன் வல்லாளுமைத் தன்மையும்:

இன்றைய இந்தியா அதன் நடுவணரசாக உள்ள தில்லியரசினால்—அதன் வல்லாளுமை வெறியினால்—ஒரு போர் அரங்கமாக மாறிக்

(தொடர்ச்சி 7-ஆம் பக்கம்)

கல்வித் துறையில் சுரண்டல்!

இங்குள்ள அனைத்துத் துறைகளிலும் பொருள் சுரண்டல், கொள்ளையடிப்பு நீக்கமற நிறைந்துள்ளதை நாம் அனைவரும் பொதுவாக அறிவோம். ஆனால் ஒவ்வொரு துறையிலும் பல்வேறு வகையில் பல்வேறு அளவுகளில் அச்சுரண்டல்களும், கொள்ளையடிப்பும் எவ்வாறு நடைபெறுகின்றன என்பதைச் சிறப்பாக நாம் அறிவதற்குப் பெரும்பாலும் வாய்ப்பு இருந்திருக்காது.

கல்வித் துறையில் அச்சுரண்டல் எவ்வாறு நடைபெறுகிறது என்பதை மட்டும் ஒரு சிறு அளவில் பார்ப்போம்.

தமிழ்நாட்டில் முன்கலைக் கல்வி (மெட்ரிகுலேசன்) மற்றும் CBSE பள்ளிகளின் எண்ணிக்கை ஏறத்தாழ 870 ஆக உயர்ந்திருக்கிறது. எண்ணிக்கை மட்டுமன்று, கல்வி நிலையங்களின் மேலாளர்கள் செய்யும் அட்டூழியங்களும் உயர்ந்துள்ளன.

ஆங்கில மனவெறி கொண்ட பெற்றோர்களின் வலிவின்மையை நன்குப் புரிந்து வைத்திருக்கும் இப்பள்ளிகள், மாணவர்களிடம் வாங்கும் கட்டணமோ மிக அதிகம். ஆனால் அங்குப் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கும் ஊதியமோ மிகக் குறைவு.

வெற்றுப் பற்றுச் சீட்டுகளில் ஆசிரியர்களிடம் கையொப்பம் வாங்கிக் கொண்டு, கொடுக்கப்பட வேண்டிய ஊதியத்தைவிட மிகக் குறைவான ஒரு தொகை மட்டுமே பெரும்பாலான பள்ளிகளில் வழங்கப் பெறுகிறது. வீட்டு வாடகைப்படி, பஞ்சப்படி முதலான எந்தத் தொகையும் அவர்களுக்கு அளிக்கப்படுவதில்லை.

சில மேலாளுமைகள், ஆசிரியர்கள் வேலையில் சேர்வதற்கு முன்பே, அவர்களிடம் வேலை விடுப்புக் கடிதத்தை முதலில் வாங்கி வைத்துக் கொள்கின்றன. அது மட்டுமல்லாமல், அவர்கள் படிப்புத் தொடர்பான உண்மைச் சான்றிதழ்கள் அனைத்தையும் பள்ளி மேலாளர்களிடம் கொடுத்துவிட்ட பின்பே, அவர்கள் வேலையில் சேர்த்துக் கொள்ளப் படுகின்றனர். ஆகவே, ஆசிரியர்களில் பலர் மேலாளுமையை எதிர்த்துக் கொள்ளவோ, ஞாயத்திற்காகப் போராடவோ இயலாத பணிப் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளனர்.

தற்செயல் விடுப்பு, ஈட்டிய விடுப்பு முதலான விடுமுறை நெறிகளும் இப்பள்ளிகளில் மறுக்கப் படுகின்றன. குறிப்பாக ஆசிரியைகளுக்குப் பேறுகால விடுமுறை கூட மறுக்கப்படுகிற கொடுமையும் உள்ளது. மேலும் ஒரு நாளைக்கு ஐந்து முதல் ஆறு பிரிவேளைகள் (Periods) பணியாற்றும் ஆசிரியர்களுக்கு ஓய்வே இல்லாத நிலைஇருக்கிறது. ஒரு வகுப்பு முடிந்ததும் நேரடியாக அடுத்த வகுப்புக்குச் செல்ல வேண்டிய நிலையிலேயே உள்ளனர்.

இதற்கிடையில், கட்டுரை ஏடு திருத்தவும், தேர்வு விடைத்தாள்கள் திருத்தவுமாக, ஒரு வழியாய்க் கசக்கி எறியப்பட்ட கரும்புச் சக்கைகளாய் ஆசிரியர்கள் வீடு திரும்புகின்றனர்.

--கறுப்புச் சட்டை

நன்றி. 'சுட்டி'—மே 89

(6-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு வருகின்றது. அதில் இந்தி(ய) அரசு ஓர் உள்நாட்டுப் போரை நடத்திக் கொண்டு இந்தி(ய)க் கொலை வெறிக்கூலிப் படைகளைக் கொண்டு இந்திய மக்களைக் கொன்று குவித்தும் வருகின்றது. ஆனால் உலக அரங்கில் தன்னை ஒரு நாடாக—ஒரு நாட்டின் அரசாக—காட்டிக் கொள்ளும் தில்லி வல்லரசு அது நடத்தும் போர்களை உள்நாட்டுக் கலவரங்கள் எனப் பட்டங் கட்டி உலக நடப்பியலிலிருந்து பிரித்து வைக்க முயற்சி செய்கிறது. அதற்காக இந்திய அரங்கில் எழும் மக்கள் எழுச்சிகளை "உள்நாட்டுக் கலவரங்கள்" என்று வேதம் ஓதிப் படைவலிமையைக் கொண்டு தில்லியை வல்லாளுமைக் கோட்டையாக உருமாற்றி வருகின்றது உண்மையில் இந்திய அரங்கில் எழும் மக்கள் எழுச்சிகள் தில்லியரசு கூறுவது போல் உள்நாட்டுக் கலவரங்கள் அல்ல; மாறாக "தில்லி இந்தியா"வின் வல்லாளுமை நுகத்தடியிலிருந்து விடுபட விரும்பும் நாட்டின (தேசிய இன) மக்களின் விடுதலையுரிமைப் போர்கள் ஆகும். தில்லி நடுவணரசின்—குடியேற்றத் தன்மை கொண்ட—வல்லாட்சியினை எதிர்த்து எழும் வல்லரசு எதிர்ப்புப் போர்கள் ஆகும் இத்தகைய போர்களின் மூலம் எழுந்து போராடும் பல் நாட்டின மக்களை (பல தேசிய இன மக்களை) ஒடுக்கிக் கொன்று குவிப்பதையே தில்லி வல்லரசு "உள்நாட்டுக் கலவரங்களை அடக்குதல்" என்று வேதம் படித்துத் தனது தேசிய ஒடுக்குமுறையை "ஓரிந்தியா" எனவும் "இந்திய ஒருமைப்பாடு" எனவும் நயன்மைப் படுத்தி வருகின்றது. எனவே வல்லரசாக நடைமுறையில் இருந்து வரும் தில்லி நடுவண் அரசின் ஆளுமை வெறியையும், அது கைக்கொண்டுவரும் இந்தி மொழி வெறியையும், அதன் தேசிய இன ஒடுக்கல் போர் வெறியையும் எதிர்த்து நடந்ததே நேரு சிலைக் குண்டு வெடிப்பாகும். (தொடரும்)

வலிவிழந்த தமிழனும், அதை உணர்த்தத் தவறிய தமிழகத்தலைவர்களும்!

-அதியமான்-

தமிழ்நாடு இணைந்திருந்த இந்தியத் துணைக் கண்டத்தை வெள்ளையரிடமிருந்து மீட்டெடுத்து, ஏறத்தாழ நாற்பது ஆண்டுகள் முடிந்து விட்டன. தமிழகம் பல வகையினும், வெள்ளையரிடமிருந்து தப்பி, வடநாட்டுக்காரர்களிடமும், அவர்களை நாடித் தம் வாழ்வை வளமாக்கிக் கொண்டிருக்கும் பார்ப்பனியரிடமும் அடிமைப் பட்டு விட்டது. தமிழ் மொழி இதனால் சமசுகிருதம், இந்தி, ஆங்கிலம் போன்ற பிறமொழிகளுக்கு அடிமையாகிக் கொண்டு வருகிறது. தமிழினம் முழுக்க முழுக்க பார்ப்பனருக்கு அடிமையாகி விட்டது. ஒரு காலத்தில் வெள்ளையனைக் கண்டு மக்கள் எப்படி அஞ்சி, அவனைக் கடவுளாக எண்ணினார்களோ? அதுபோலவே இன்று தமிழ் நாட்டு மக்கள், பார்ப்பனர்களைக் கண்டு அஞ்சி அவர்களைக் கடவுளாக மதிக்கின்றனர். அவர்களுடைய கால்களில் விழுகிறார்கள். வெள்ளையர் தமிழர்களுக்குப் பல நன்மைகளைச் செய்தனர். பார்ப்பனியத்தின் கொடுமைகளால் அல்லல்பட்ட தமிழர்களில் தாழ்த்தப்பட்டோரை கல்வி மூலம் விழிப்படையச் செய்தனர். அறம் சிறிது காக்கப்பட்டது. இன்றோ பார்ப்பனரே தமிழினத்தைப் பல வகையிலும் அழிப்பதற்குத் திட்டங்களைத் தீட்டிச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

தமிழ்நாட்டை உள்ளடக்கி ஆளும் பார்ப்பனிய நடுவணரசு மிகுதியான அதிகாரங்களைப் பறித்து வைத்துக் கொண்டு, தமிழ் மொழியையும் தமிழினத்தையும் அழித்துவிடத் துடியாகத் துடிக்கிறது. தமிழர்கள் கோழைகளாக இருந்துக் கொண்டு தம்முடைய தாய் மொழியைக் கூடக் காப்பாற்ற முன் வரவில்லை. தமிழ் நாட்டில் தமிழ் மொழிப் பற்றுள்ள தமிழர் தலைவர்கள் ஏறத்தாழ 22 ஆண்டுகள் தமிழ்நிலத்தில் ஆளுங்கட்சியாக இருந்தும், தமிழகக் கோவில்களில் வழிபாட்டு மொழியாகவும், (கிறித்துவக் கோவில்களில் தமிழில்தான் வழிபாடுகள் நடைபெறுகின்றன. அவை தவிர மற்றவற்றில் பிறமொழிகளின் ஆட்சி நடைபெறுகிறது.) கல்விக் கூடங்களில் பயிற்று மொழியாகவும், அறமன்ற மொழியாகவும், அரசு அலுவலகங்களில் கூட அலுவல் மொழியாகவும் தமிழை ஏற்றி வைக்க முடியவில்லை. இந்தியைத் திணிக்கும் நிலைகளை நிறுத்தி வைக்க முடியவில்லை. இலங்கையில் தமிழினத்தை நம் கண் முன்னாலேயே கொன்று குவிப்பதைத் தடுக்க முடியவில்லை. இந்தியாவின் ஒருமையிலிருக்கிறோம், இருக்க வேண்டும் எனக் கூறும் தமிழர் தலைவர்கள் (இந்திரா பேராயக் கட்சியாளர்)கூட இந்தியாவிற்குத் தலைமையமைச்சராக, அல்லது குடியரசுத் தலைவராகத் தூய தமிழன் வர முடியவில்லை. தமிழ்நாட்டுப் பார்ப்பனர் குடியாட்சித் தலைவராக இருந்ததை மேலும், இருப்பவரைத் தமிழர் எனக் கூறித் தமிழரை ஏமாற்றிப் பேசி வருகின்றனர். முன்னால் குடியரசுத் தலைவர் இராதா கிருட்டிணனும், இப்போதைய வேங்கட்டராமனும் பச்சைப் பார்ப்பனர். அவர்களுடைய பண்பாட்டிற்கும், தமிழர்களுடையப் பண்பாட்டிற்கும் வேற்றுமையைத்தவிர எவ்வகை ஒற்றுமையும் கிடையாது. வேங்கட்டராமன் ஆரிய மொழியாகிய சமசுகிருதம் உலகிலேயே உயர்ந்த மொழி என்கிறார். தமிழ்மொழியைப் பற்றி அவர் பேசுவதே கிடையாது. எந்தப்பார்ப்பானாவது தமிழ்ப் பெயர் வைக்கிறானா? எந்தப் பார்ப்பானாவது தமிழர் விழாவாகிய பொங்கல் விழாவைக் கொண்டாடுவதைக் காட்ட முடியுமா? இப்படி எத்தனையோ எடுத்துக் காட்டுகளைக் கூற முடியும். அப்படி இருக்க அவர்கள் தமிழர்களெனக் கூறலாமா? அவர்களைத் தமிழர் எனக் கூறுவதை மறுக்க முடியாதபடி தமிழர்கள் வலிவிழந்து விட்டனர்.

காவிரி நீர்ச் சிக்கலில் கர்நாடகம் செய்யும் செயல்களால் தஞ்சை பாலையாக மாறி வருகிறது. நடுவணரசு வேடிக்கை பார்க்கிறது. தமிழர்களால் தட்டிக் கேட்க முடியவில்லை. அதிகாரம் வடவரிடம் இருக்கிறதே. தெலுங்கு கங்கை சிரிப்புக்கு இடமாக இருக்கிறது. ம. கோ. இரா. காலத்தில் பணத்தைக் கொடுத்து விட்டுப் பல்லைக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதிகாரம் பார்ப்பானிடம் இருக்கிறதே, அவன் என்றைக்கும் தமிழனுக்குப் பகைவன். அதைக் கேட்க தமிழன் வலிவிழந்து விட்டான்.

கலைஞர் சிலை சுக்குநூறாக உடைந்து அது இருந்த இடந்தெரியாமல் போய் விட்டது. 5 கோடி மக்களை ஆளும், 15, இலக்கப் பார்ப்பனர் பின்னணி தானே. எவ்வகை நடவடிக்கையும் இன்னும் இல்லை. வடநாட்டுக்காரர் நேரு சிலை உடைபடவில்லை. இன்னும் திடமாக இருக்கிறது. அந்தச் சிலையை உடைக்க முயன்றனர் என்று ஆறு தமிழர்களை இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தில் இன்னும் சிறையாளிகளாக வைத்துள்ளனர். இந்த நிலைக்குக் கண்ணீர் விட வேண்டிய தமிழன் கவலை கூடப் படவில்லை. இது ஞாயமில்லை எனக் கேட்க வலிவிழந்து விட்டான். இழந்தவனாகி விட்டான். மூப்பன் கேட்கிறார். நேரு சிலையை உடைக்கும் அளவிற்கு வன்முறை தலைதூக்கி விட்டது என்று, கலைஞர் சிலையை உடைத்தது என்ன மென்முறையோ? மூப்பனுக்கு நேரு என்ன அப்பனா? அல்லது பாட்டனா? கலைஞர் சிலை உடைபட்டபோது மூப்பன் வாய் திறக்கவில்லை, பார்ப்பான் தமிழ-

னுடைய தோள்களில் ஏறி ஓட்டுகிறான். ஆறு தமிழின இளைஞர்களைப் பாதுகாப்புச் சட்டத்தில் வைக்க என்ன குழப்பம் நாட்டில் நடந்தது? பாது காவல்சட்டம் தமிழர்களை அடக்கி ஒடுக்கி அடிமைப் படுத்த என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். மூப்பன் போன்ற பார்ப்பன அடிமைகளைக் களை எடுக்க ஒருநாள் வரும். அப்போது மூப்பன் பாது காவல் சட்டத்தில் சிறையில் இருக்க வேண்டி வரும்.

காமராசு காமராசு என இப்போது கத்தும் இந்திரா பேராயக் கட்சிக்காரர்கள், அவரை வட நாட்டிலிருந்து அவர் வீட்டில் தீயை வைத்துத் தெற்கு நோக்கி விரட்டியபோது ஒன்றும் பேச-வில்லையே! ஏதாவது பேசினால் வடவன் சினத்திற்கு ஆளாக வேண்டுமே என அஞ்சி விட்டனர்; வலி-விழந்து விட்டனர். இது மானத்தை இழந்த செய-லாகும். மானத்தை இழந்து விட்டால் வலிவிழந்து போகும் என்பதைத் தமிழர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். மானத்தைப் புணத்திற்கும் பதவிக்கும் விற்க வேண்டாம்.

100 பேர் தமிழர்கள் இருக்கும் கூட்டத்தில் ஒரு பார்ப்பான் என்ன சொல்லுகிறானோ அதுதான் நடக்கிறது. ம. கோ. இரா. என்ற மலையாளி தமிழ்நிலத்திற்கு முதலமைச்சராக ஒதுங்கினார். அவர் பார்ப்பனருக்கு அடிமையாக நடந்தார். கோடிக்கணக்கில் பணத்தைக் குவித்தார்; நாட்டைக் குட்டிச் சுவராக்கி விட்டுப் போய் விட்-டார். அவருடைய சேர்க்கை மனைவியர் இருவர். ஒருவர் சானகி. இன்னொருவர் செயலலிதா. இரு-வரும் நச்சுப்பாம்புகள். நடித்துக் காட்டும் பட நடிகையர். இவர்களுடைய முந்தானையைப் பிடித்துக் கொண்டு சவலப்பிள்ளைகள் போல சில தமிழர்கள் அலைகிறார்கள். அவர்கள் இருவரும் கேடு கெட்ட தமிழர்களைத் தங்களுடைய கால்களில் விழ வைத்து அடிமையாக்கி வருகின்றனர். அந்தப் பார்ப்பனத்தியை விரட்டிவிட்டு அக்கட்சியிலுள்ள தமிழர்களே தலைமை ஏற்க வலிவில்லை. பகரமாகத் தமிழர்களே ஒருவருக்கொருவர் சண்டையிட்டு வலிவிழக்கின்றனர்.

அடிமை வாழ்க்கையில் நலன்கள் கிட்டத்தான் செய்யும். அஃது இழிவான வாழ்க்கை.

அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர். (குறள் 954)

கோடிப் பொருள் கிடைத்தாலும் நற்குடியினர் குற்றேவல் செய்யும் செயலைச் செய்யார் என்று பேராசான் வள்ளுவர் கூறுவதை நினைத்துப் பார்க்க வேண்டும்.

எனவே அதிகாரத்தைச் செலுத்த வாய்ப்புக் கிட்டிய தலைவர்கள் எவரும் தம் வாழ்க்கையை மட்டும் வளம் பெற முயலுவதை மக்கள் புறக்-கணிக்க வேண்டும்.

தமிழ் நாட்டு மக்களுக்கும் அறிவியலுக்கும் எவ்வகைத் தொடர்புமில்லை. அவர்கள் யாவற்றை-யும் கடவுளர்கள் பார்த்துக் கொள்வார்கள் என நினைத்து விட்டார்கள், நோய் வந்தால்கூட பழனி போனால் போதும் தீர்ந்து விடும் என்று அலையாக அலைந்து சாகிறார்கள். இதற்கு வழி காட்டியது, ம. கோ. இராவே. அவர் மூகாம்பிகை கோவிலுக்குச் சென்று அதற்குப்பெரிய வலிவு இருப்பதாய்க்கூறி, மக்களை முட்டாளாக்கி 10 ஆண்டுகள் முதலமைச்ச-ராக இருந்து, கோடி கோடியாகச் செல்வத்தைப் பெருக்கி வைத்து விட்டுப் போய் விட்டார். அத்-தோடு செயலலிதா என்ற பட நடிகைப் பார்ப்-பனத்தியை எப்போதும் தமிழர்களுக்குப் பகையாக இருந்து தொல்லைகளைக் கொடுத்துக் கொண் டிருக்கப் பயிற்சி அளித்து விட்டு மறைந்து விட்-டார். அஃது இப்போது தமிழர் ஆட்சி நடைபெறு-வதைப் பொறுக்க முடியாமல், ஆடு, ஆடு என்று சென்னையிலிருந்து டெல்லி வரை தலையை விரித்துப் போட்டுக் கொண்டு, சீலை கிழிய ஆடிக் காட்டிக் கொண்டு திரிகிறது. இந்த நிலையை மக்களிடம் எடுத்துச் சொல்ல வலிவில்லாமல், அவரை வைத்துப் பிழைக்கப் பின்னால் அலைகிறார்-கள். திருநாவுக்கரசு தலைமையில் ஒரு கூட்டம், குமரி அனந்தன் தலைமையில் ஒரு கூட்டம் சேர்ந்து தமிழ் மக்களுக்கு அரசு நன்மைகளைச் செய்ய விடாது இரண்டகம் செய்து கொண்டிருக்கின்றன. தான் மட்டும் வாழ்ந்தால் போதும்; மக்கள் எக்கேடு கெட்டாலும் நமக்கென்ன என்று தமிழர் ஆட்சி மீது காழ்ப்புக் கொண்டு அலைகிறதுகள். அவர்-களுக்குத் தலைமை ஏற்க வலிவில்லை. கோழைகள் ஏமாற்றுக்காரர்கள் என மக்கள் நினைத்து விட்டதை அவர்கள் உணர்ந்து கொண்டு, வெள்ளைத்தோலைக் கையில் பிடித்துப் பார்ப்பனத்-தியைத் தமிழகத்திற்குத் தலைவியாக்க விலை போகிறார்கள். கட்சியின் தலைமையைக் கைப்பற்ற வலிவற்ற தமிழர்கள் அந்தப் பார்ப்பனத்தி சொல்லும் பொய்யுரைகளை மெய்யுரையாக ஒப்பனை செய்து ஒப்புவித்து மக்களை ஏமாற்றுகிறார்கள். செயலலிதா அடிக்கும் பறைக்கேற்ப ஆட்டம் போடுகிறார்கள். பாவலரேறு அவர்கள் கூறுவதைப் போலத் தமிழ்நாட்டு அரசு நடுவணரசின் மேற் பார்வையிலிருக்கும் வரை தமிழனுக்கு வாழ்வில்லை. இதை மக்களிடம் கூறித் தமிழக உரிமை மீட்புக்கு அணியமாகத் தமிழர் தலைவர்கள் தவறிக் கொண்டு வருகிறார்கள். மக்களுடைய நிலைகளை ஆராய முயலவில்லை. மக்களிடம் தமிழ் உணர்வும் இன-வுணர்வும், நாட்டுப் பற்றும் உண்டாக அவர்களு-டைய சிந்தனையைத் தூண்ட மறந்துவிட்டார்கள்.

(தொடர்ச்சி 10-ஆம் பக்கம்)

பறம்பை அறிவன் பக்கம்!

1. நோக்கம்.., நோக்கி!

'நாம் வெளிப்படையாக இருப்போம்!' இன்று உருசியா, சீனாவின் நடைமுறைகள் இப்படிக் கூறியதும் நினைவுக்கு வருகின்றன. ஒரு கட்சி, ஓரியக்கம், ஒரு சழகம் எதுவாயினும் அதனுடைய நோக்கம், திட்டம் தெளிவான வரையறை கொண்டிருத்தல் வேண்டும். அவற்றிற்கு ஏற்பவே செயல் அமையும்!

இளைஞர்கள் வெளிப்படையாகவே இருக்க விரும்புகின்றவர்கள். ஆனால், அரசும், அமைப்பும் அவர்களுக்குத் 'தடை'யாகக் குறுக்குச் சுவராக உள்ளதென்று புரிந்ததும் அவற்றை மீறவும் தகர்க்கவும் முற்படுகின்றார்கள். இவர்களின் அரசியலறிவை, குமுகவுணர்வை வளப்படுத்தும் திட்டம் அமைப்புக்குள் இடம் பெறுதல் வேண்டும். இதனை அதிகம் ஆக்கிட அடிக்கடி முயற்சி வேண்டும். இல்லையேல், நடைமுறை என்ற பேரில் 'தவறுகள்' 'சரிகள்' பற்றிய சிந்தனைகள், முடக்கங்கள் குப்பைகளாக உயர்ந்து விடும்!

அரசியல் தெளிவைப் பெறக் குமுகாய நடைமுறையினை நுட்பமாக ஆராய்தல் வேண்டும். இதன் சிறப்பிடத்தை மறந்து விடுதல் கூடாது.

இளைஞர்கள் அமைப்பு என்று எடுத்துக்கொண்டால்—முந்திய தலைமுறைக்கும் இவர்களுக்குமுள்ள முரண்பாடு, புதிய சிந்தனை, மாற்றங்கள் குறித்த அறிவு, இவைகளின் பொருத்தப்பாடு.

சாதி, மதம், பால் அறிவு—கலை, இலக்கியம், விளையாட்டு இவற்றில் தீவிரம் காட்டும் தன்மைகள் குறித்தும் கணக்கெடுத்தல் வேண்டும்.

ஓரமைப்புக்குள் வரும் பலதரப்பட்ட சிந்தனைகளைப் பொதுவாகத் தொகுத்துப் பார்ப்பதுண்டு. குறிப்பாக இளைஞர் அமைப்பில 'தீவிரம்' கொண்டவர் கை ஓங்கும். அதே வேளை, அமைப்பை விட்டு விலகியோடாத நடைமுறையை உருவாக்கிடல் வேண்டும். இதற்குப் 'பட்டறிவும்', மெய்ம்ம அறிவும் கொண்டவர்களுக்கு உரிய இடம் அளித்தால், நோக்கம் நிறைவேறுவது எளிதாக முடியும்!

(9-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இனி மேலாவது தமிழர் தலைவர்கள் ஒன்றுகக் கூடித் தமிழ் நாட்டு விடுதலைக்கு மக்களை அணியப் படுத்த முன் வர வேண்டும்.

தமிழர்கள் இழந்த வலிவை மீண்டும் பெற, தந்தை பெரியார் போல அலைந்து மக்களை சிந்தனையுள்ள அறிவுள்ளவர்களாக வளர வேண்டியதை நீட்டிப்புச் செய்யாமல் துணிக. அல்லது தமிழர்கள் கோழைகள் என்ற எண்ணம் உலக நாடுகளில் வலுப்பெறும்.

2. தொண்டுக்கு மதிப்பில்லை...!

ஆண்டு விழா, பரிசளிப்பு நடத்துவது புத்துணர்ச்சி ஊட்டவே. அவை, 'பலரின் உள்நோக்கத்தை' நிறைவேற்றவும் உதவும். முதுகு சொரிதல், தங்களின் சாய்காலைக் கூட்டிக் காண்பிப்பது போன்ற வேலைகளும் நடைபெறும். அதே வேளை, வேண்டாதவரைக் காலைவாரி விட்டு வேடிக்கை பார்க்கவும் பயன்படும் பொய்கள் 'மெய்'யாக்கப் படுவதும் கண்கூடு. அப்படிப்பட்ட 'கூத்து' நாடெங்கும் நடப்பதென்னவோ உண்மை தான்.

தமிழர் தேசிய இயக்கம், ஆட்சி, அதிகாரம், பொறுப்புக் காரணமாகக் 'கவனமாக அகப்பையைச் சுழற்றும்' கலைஞரைத் திறனாய்கிறது. அதில் சூடும், வெப்பமும் உள்ளது. நடுவண் அரசுடன் ஒத்துப் போவது—வை. கோ. வின் வாய் பூட்டப் பட்டிருப்பது—ஈழச் சிக்கல் அயன்மைப் பட்டுப பேசுவது—'தேசிய முன்னணி'ப் போராட்டங்களில் 'தீவிரம்' இல்லாமலிருப்பது எல்லாம் அலசலுக்கு ஆளாகியுள்ளன!

மானாமதுரை பரந்தாமனுடன் பேசும் போது த. தே. இ. நடவடிக்கைகளைப் புரிந்து கொள்ள முடிந்தது.

இயக்கம், கட்சிகளில் 'பெண்களின் தலைமை'க்கு மதிப்பு இல்லை. 'ஆண்கள்' என்றால் ஒரு தனிப்பார்வைதான் என இலட்சுமி அம்மாள் கூறினார். இந்த அம்மையார், மாவட்ட ஆட்சியாளரிடம் 'அருவருப்பான சுவரொட்டிகளைக் கண்டித்தும், கழிவுநீர் குடிநீருடன் கலப்பதைச் சுட்டிக் காட்டியும் 'வேண்டுகோள்' கொடுத்திருந்திருந்தார். திரு, பழ. நெடுமாறனிடம் பற்றுடைய இவர், மகளிர் அமைப்பு, முன்னேற்றம் கருதி உழைக்கிறார். படிப்பறிவு குறைந்தவர் என்றாலும், பட்டறிவு இவரிடம் பளிச்செனப் புலப்படும்!

'இங்கெல்லாம் தொண்டுக்கு மதிப்பில்லை' என்று நல்லவுள்ளங்கள் அடிக்கடி புலம்புவது தெரிகிறது.

அரசியலில் விளம்பரம் இல்லாதவரும், பணம் இல்லாதவரும், நேர்மையை முதலாகக் கொண்டு போராடுகிறவரும் பொய்யர்களின் முரட்டுப்பிடியினால் தாக்கத்திற்கு ஆளாவதை நினைக்க மனம் ஆற்றாமையால் வாடுகின்றது.

இளைஞர்கள் தீவிரமாகச் செயல்படும்போது 'ஐயோ, இவர்களை ஆண்டவன்தான் காப்பாற்றுதல் வேண்டும்' என்று கையறுநிலையில் நிற்கின்றவர்களே அதிகம்.

இதற்கெல்லாம் தீர்வு...என் மனம்...மேலும்... ஆழமான கவலையில்...வெற்றிப்படியேறிய வீர வரலாறுகள் கவலைகளை மாற்றுகின்றன!

Scanned with CamScanner

3. தமிழர்க்கொரு வேண்டுகோள்!

''தமிழன்' என்று கூறினால் இழிவு. இந்தியன் என்றால் பெருமை'' என்று பேசுகின்றவர்கள் தமிழ்நாட்டில்தான் உண்டு. அதுவும் தமிழனுக்குத்தான் அந்த நினைப்பு அதிகம். ஏன்?

செம்மொழி-சீரிய இலக்கியம், தொன்மை வரலாறுகள் எல்லாம் இருந்தும் 'தமிழன்' என்று சொல்லிக் கொள்வதில் என்ன 'தலைக் குனிவு'.

பேராயக்கட்சி ஆட்சி, அ.தி.மு.க. ஆட்சி, தி.மு.க ஆட்சி, என்று சுழன்றபோதும், இனி எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தபோதும், தமிழ்நாட்டில் தமிழன் தான் ஆள முடியும். தமிழனின் அறியாமையை வைத்து 'வித்துகளை' விற்றுத் தின்னும் 'கேடர்கள்' எவர் வந்தாலும் போனாலும் 'ஒரு தெளிவான நிலைமை' உருவாகி வருவதை நாம் காண முடிகின்றது.

பழமைகள் சரிவதும், புதுமைகள் தட்டுத் தடுமாறி நடை போடுவதும் இயக்க—இயங்கியல் மூலம் புலப்படும்.

மூடம் விலகுகின்றது. ''அறியாமை மன இருட்டு. அந்த இருட்டு வானில் நிலவுமில்லை; விண்மீன்களும் இல்லை'' என்று கன்பூசியசு கூறிய நிலைமை தமிழ் நாட்டில் இல்லை. புதிய நம்பிக்கை ஒளிகள் அங்கங்கே தோன்றி வருவதைக் காண்கின்றோம்.

ஒளி, பளிச் பளிச்சென்று பாயும்போது, சாலையில் தடுமாறும் நடைப் பயணிகள் போலத் தமிழர்கள் ஒன்றுபட ஒழுங்குபட முடியாமல் திணறுகிறார்கள்.

தமிழின மேன்மைக்குத் துணை வரும் அமைப்புகள் ஒன்றிணைய முடியாமல் போகலாம். சாலையோரத்தில் அணைந்த மின்சாரம் மீண்டு(ம்) வரும். அப்போது, தமிழர்கள் நெறிப் படுவார்கள்.

'அடிமைப் படுத்துவதும், அடிமைப்படுவதும் செய்யோம்' என்ற முழு நிறைக் கொள்கையைத் தமிழர்கள் ஏற்றுச் செயல்படுகின்ற காலம் வரும் என நம்புவோம்!

தி, க, தி. மு க. தமிழர் தேசிய இயக்கம், தமிழகத்தின் நலம் நாடும் பொதுமைக் கட்சிகள், தமிழின அமைப்புகள் எல்லாம் 'ஒளி' பரப்பிய போதும், விடுதலை என்னும் மின்சாரம் சாலையோர வீடு, கடை எங்கும் ஒளியூட்டல் வேண்டும்!

உ. த. மு. க. உலகந்தழுவிய ஒரு பண்பாட்டியக்கம், தமிழினச் சாரம் உண்டெழுந்து வளர்ந்திட இவ்வியக்கம், அனைத்துத் தமிழ், தமிழின, நாட்டு நலந்தேடும் அமைப்புகளை அறைகூவி நிற்கின்றது. அதே வேளை, அனைவர்க்கும் ஒரு மேடையாக—கருத்திணக்கம் காண உதவும் அரங்காக உ. த. மு. க.வின் 'தமிழ் நிலம்' பயன்படுவதை—ஈடு கொடுத்து நிற்பதை நாம் நடைமுறையில் கண்டு வருகின்றோம்.

தமிழ் நிலத்தில் உலவுங்காற்று—முளைக்கும் புல், தளிர்க்கும் இலை, பறக்கும் புள், பார்க்குமிடம், நிலவு, வான், மழை எல்லாம் நேசிக்கின்ற, மக்களைப் போற்றுகிற-பாவலரேறு, படைப்புகளை வரவேற்கிறார்!

புதிய புதிய கலன்களை உருவாக்கும் பாசறையைத் 'தமிழ் நிலம்' என்று ஏற்று மகிழுங்கள்.

4. திருமணத் தொடர்பாக. ..!

அன்று (14-9-88) உடல் நலமில்லை என்றபோதும் அழைப்பவர் அருள்நேயன். திருமணமோ இனிய நண்பர் கணேசனுக்கு. அவர் 'பெண் முடிக்கும்' இடம் செல்வ நாயகபுரம். மணமகள் குடும்பம் பேராயக் கட்சி சார்புடையது. மணமகனோ, தி. க. சிந்தனையில் உள்ளவர். ஆனால், வாழ்க்கையை 'உறவிலே'தான் தொடங்கியாதல் வேண்டும். அங்கே, அறிஞர் எவரும் வருவதற்கு ஒப்புக் கொண்டும் வராமல் போய்விட்டனர். எனவே, இடத்தை நிரப்ப நான் போனேன் என்றால் மிகையன்று.

அங்கே பேசியது நான் மட்டுமே. அதனையும் முழுமையாகச் செய்ய முடியாதபடி 'நல்லநேரம்' குறுக்கிட்டு விட்டது. அங்கே சிறகு கட்டிய என் சிந்தனைகளை இங்கே தருகிறேன்.

அரசியலைத் தலைகீழாகப் புரட்டிவிட ஆள்பவர் முயலலாம். ஆனால், வரலாறு தன் புரட்சிகரக் கடமையை ஆற்றியே தீரும். ஆங்கிலேயரை விரட்ட அணி திரட்டும் பாடலெழுதியபோது,

''வாழிய செந்தமிழ்; வாழ்க நற்றமிழர் வாழிய பாரத மணித் திருநாடு'' என்றவர்கள், இன்று, தமிழாவது, தமிழராவது, 'எல்லாம் பாரதமே, இந்தியே' என முரண்டு செய்கின்றார்கள்.

'கோன்' என்பதை இழக்கவும் 'யாதவ்' என்பதை ஏற்கவுமான நிலைமை, 'தாயை இகழும்' அறியாமையில் தோன்றியதே. சாதி இழிவை அகற்ற 'மொழி' தடையானதா என்ன? மரபு வளர்ச்சியை, மாந்தரின் உரிமை வளர்ச்சியோடு ஒப்பு நோக்காமல், 'வேற்றின அடிமைத்தனத்தில் இன்பம்' காண்பதையே 'சாதி'க்குப் புதுப்புனைவு சூட்டுவதாகும்.

1921-இல் பேராயக் கட்சி மொழியுரிமை, இனவுரிமையை முன் வைத்தது. இன்று, ஆங்கில அரசின் சட்டவரம்பில் தற்சார்பை இழந்து நிற்கின்றது.

நாம், நம் வாழ்வுரிமையை மீட்டெடுக்க வேண்டுமெனில் அரசியல், குமுகாய உரிமைகளைப் பற்றித் தெளிந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

(தொடர்ச்சி 12-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

கழகக் காலம் போய், மெல்ல மெல்ல நாம் பெண்ணடிமைக் குமுகாய வளைவுக்குள் அகப்பட்டுத் திணறிக் கொண்டிருக்கிறோம்!

இன்று 'அரசியலை அடுப்படியிலிருந்து தொடங்க நாம் கற்றல் வேண்டும். 'ஆனை அசைந்து தின்னும், அடுப்பு அசையாமல் தின்னும்' எண்கிற மக்களறிவைத் தலைசிறந்த அரசியல் ஆவணமாகக் கொள்ளுதல் வேண்டும்!

திருமண அகவையை உலக நாடுகளுடன் ஒப்பிட்டுக் கூறும் ஒரு புள்ளி விளக்கம்.

	மகளிர்	ஆடவர்
எகிப்து	19.4	25.2
கனடா	21.1	24.8
அமெரிக்கா	20.4	23.2
சப்பான்	23.4	25.8
இந்தியா	14.5	20.

இங்கே, தமிழ்நாடு இநதியப் புள்ளி விளக்கத்திற்குள் சிக்கியுள்ளது, என்றாலும் இன்றுள்ள பொருளியல் நெருக்கடி, திருமணம் செய்யும் காலத்தைத் தள்ளிக் கொண்டே போவதுதான் உண்மை. 'பருவத்தே பயிர் செய்' என்பது, இன்று இளைய தலைமுறைக்கு மறுக்கப்பட்டுள்ளது. மகளிர் 20 அகவையைத் தாண்டியும், ஆடவர் 30 ஐ நெருங்கியுமே மணம் புரியும் நிலைமையை நாம் நடப்பில் கண்டு வருகின்றோம்,

பெரியார் 'பெண் அடிமை என்பது, மாந்தக் குமுகாய அழிவு' என்று கூறியுள்ளார்.

''கணவன் மனைவிக்குத் தலையாய் இருக்கிறான்'' என்ற காலம் கரையேறி விட்டது. மனப் பண்பு, திருமணம் புரிய உரிய பண்பாக மலர்கின்ற காலம் வரும்...வரும் என எண்ணிப் 'படுத்தது' சிந்தனை!

0

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

அப்பா சொல்கிற சிக்கல்களை உன்னால் முடியும் மட்டும் தீர்ப்பாய் என எண்ணுகிறேன். அக்காவிடமும் மாமாவிடம் பேசி, ஒன்றிணைந்து செயல் படுவதற்கான சிந்தனையை ஊட்டு.

அக்கா! எப்படியிருக்கிறாய்? உடல் நலத்தை நன்கு பேணிக் கொள். அதுதான் நம் முதல் அடிப்படை. அது இல்லையெனில் எதையும் நாம் செய்ய இயலாது. மாமா எப்படியுள்ளார்? செம்மல் எப்படியிருக்கிறாய்?—நன்றாகப்படி! விடுமுறைகளில் அம்முப்பாவுடன் மிகு துணையாக இரு. மடல் எழுது. பிறபின். —அன்புடன், **பொழிலன்.**

உரிமைக்குப் புரட்சியே விடிவு!

— பறம்பை அறிவன் —

மதம் மாறிய கிறித்தவர்களுக்குச் சமவுரிமை வேண்டும் எனப் புதிதாகத் தோன்றிய 'கிறித்தவ ஐக்கியக் கட்சி' கூறுகிறது. — 'நல்லாட்சி முன்னணி' என்ற பேரில் ஒரு புதிய அமைப்பு வேறு தமிழ்நாட்டில் தோன்றியுள்ளது. இரண்டும் மதப்பின்னணிகள் உடையவை. ஊழலின் ஊற்றுகள். 'ஊழலை'த் தடுக்கவும் சமவுரிமை கேட்கவும் போகின்றனவாம். மக்களிடம். மக்களைக் கூறு போடப் பல கட்சிகள். அவர்களுக்குச் சோறு போடவோ அவர்கள் வாழ்வில் மாற்றம் ஏற்படவோ புரட்சி செய்ய எவரும் இல்லை...!

உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்!

1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமனிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

சிந்தனைக்கு - 39

மக்கள் எதிர்த்துத்தான் ஓர் அரசு ஒரு திட்டத்தைத் தவிர்க்கிறதென்றால், அது மக்கள் அரசாக இருக்கமுடியாது.

(மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண் - 122.

நூல் அஞ்சல்

அனுப்புதல்:

தமிழ்நிலம்

5. அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை - 5

தொலைபேசி எண்: 847829

உறுப்பினர்:

தனி இதழ் விலை	உரு. 1-00
ஆண்டுக் கட்டணம்	உரு. 50-00
அரையாண்டுக் கட்டணம்	உரு. 25-00

பெறுநர்:

திரு. / திருவாட்டி

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.

TN/MS (C) 657